**கண்டி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம் - நிலை 1, கட்டம் II 2013**

கண்டி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம் - நிலை 1, கட்டம் II இன் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை அரசாங்கத்திற்கும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2008 செப்தெம்பர் 03 ஆம் திகதிய எஸ்எல் - பி 90 ஆம் இலக்க துணைநிலை கடன் உடன்படிக்கையின் IV ஆவது உறுப்புரையின் 4.03(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையான (ஜேஐசீஏ) என அறியப்படும் தற்போதைய ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கிக்கும் (ஜேபீஐசீ) இலங்கை சனநாய சோசலீச குடியரசிற்கும் இடையில் கைசாத்திட்ட 2007 மார்ச் 28 ஆந் திகதிய எஸ்எல்-பி90 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, முன்னாள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சும் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை (என்டபிள்யூஎஸ்டிபீ) செயற்திட்டத்தின் அமுலாக்கும் முகவராக உள்ளது. கண்டி பெரும்பாக பகுதி மற்றும் புறநகர் பகுதியின் நீர் வழங்கல் சேவை மட்டத்தினை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. செயற்திட்டத்தின் மொத்தக் கிரயம் ரூபா 4,164 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 4,664 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 3,078 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 3,447 மில்லியன் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கி நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. பின்னர் கிரய மதிப்பீடு மேலதிக வேலைகள் மற்றும் விலைத்தளம்பல்கள் காரணமாக ரூபா 7,146 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 5,497 மில்லியன் வரை சீரமைக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 6,024 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 4,634 மில்லியன் ஜப்பான் சர்வதேச முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2007 மார்ச் 30 இல் தொடங்கியிருந்ததுடன் 2012 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. மேலும், செயற்திட்ட காலம் 2015 யூன் 20 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்

பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்தான கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(ஒ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஓ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும் இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொளள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப வைப்பு, அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப் பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(உ) முன்னைய ஆண்டிற்கான எனது கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்திட்டத்தின் உத்தியோகத்தர்களிற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் செலுத்தப்பட்ட ரூபா 1.3 மில்லின் தொகையான வேதனங்கள் செயற்திட்டத்தின் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கண்டி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம் - நிலை 1, கட்டம் II என அழைக்கப்பட்ட வேறு செயற்திட்டத்தின் ஒப்பந்தகாரருக்கு செயற்திட்டத்தால் செலுத்தப்பட்ட ரூபா 1,030.9 மில்லியன் தொகை இந்த செயற்திட்டத்தின் நடைபெறும் வேலையின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது.

#### 2.2.2 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றில் காட்டப்பட்டவாறு மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 787.83 மில்லியன் தொகையான கடன் பெறுகைகள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சால் பேணப்பட்ட பதிவேடுகளில் காட்டப்பட்ட ரூபா 717.90 மில்லியன் பெறுகைகளுடன் உடன்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,674.36 மில்லியன் தொகையான கடன் பெறுகைகள் பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இத்திகதியில் ரூபா 5,819.99 மில்லியன் தொகையான கடன் பெறுகைகள் மாத்திரம் பெறப்பட்டிருந்தது. செயற்திட்டமானது இதன்படி வித்தியாசங்களை இணக்கம் செய்வதற்கும் பேரேட்டு மீதிகளை சீராக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் உள்ளதன்மையை உறுதிப்படுத்துவதற்கு செயற்திட்டத்தால் விரிவான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தால் 2010 யூலை 26 ஆம் திகதிய 05 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளக கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கடன் உடன்படிக்கையின் 2 ஆம் பட்டோலையின் பிரகாரம், பொது நிர்வாக செலவினம் மற்றும் ஏனைய நேரடிக் கிரயங்கள் கோருகின்ற நோக்கத்திற்காக பொருத்தமற்றிருந்தன. எவ்வாறாயினும், செயற்திட்டமானது மீளளிப்பிற்கான ஒப்பந்தகாரர்களின் விலைப்பட்டியல் மற்றும் கோரப்பட்டவைகளில் ரூபா 4.5 மில்லியன் தொகையான பொது நிர்வாக செலவினத்தை உள்ளடக்கியிருக்கவில்லை.

(ஈ) கொள்வளவு வழிகாட்டலின் 5.4.12 ஆம் பந்தி, 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்தின் 21 ஆம் பிரிவு மற்றும் 2002 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 364(3) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி என்பவற்றிக்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு பெறுமதி சேரி வரி கொடுப்பனவுகள் மீதான மாதாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2013 இல் செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரியின் மொத்தக் கொடுப்பனவுகள் 62.80 மில்லியனாக இருந்தது.

(உ) 1987 இன் 03 ஆம் இலக்க அரச ஒப்பந்த அதிகாரச் சட்டத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம், ரூபா 5 மில்லியன் அல்லது அதற்கு மேல் ஒப்பந்தங்களை ஏற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர் அரச ஒப்பந்த பதிவாளரின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். மேலும், கேள்வி வழங்கிய பின்னர் 60 நாட்களிற்குள் கேள் உடன்படிக்கை அரச ஒப்பந்த பதிவாளருடன் பதிவு செய்யப்பட வேண்டும். இந்த வேண்டுகை செயற்திட்டத்தினை கையாளும் ஒப்பந்தகாரரால் இணங்கியிருக்கவில்லை. மேலும், செயற்திட்டமானது இந்த வேண்டுகையை கருத்திற்கொள்ளாமல் ஒப்பந்தகாரர்களுடன் செயற்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிப் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மீளாய்வாண்டின் போது மற்றும் 2013 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 4,634.00 | 6,024.00 | 718.00 | 609.50 | 787.80 | 3,530.81 | 4,769.70 |
| இலங்கை அரசாங்கம் | 863.00 | 1,122.00 | 200.00 | 128.43 | 169.53 | 743.14 | 980.95 |
| மொத்தம் | 5,497.00 | 7,146.00 | 918.00 | 737.93 | 957.33 | 4,273.95 | 5,750.65 |

மேற்குறிப்பிட்ட தகவலின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த 8 ஆண்டுகள் செயற்பாட்டு காலத்தில், செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6 ½ ஆண்டுகள் பூர்த்தியான பின்னர் நிதிச் செயலாற்றல் 76 சதவீதத்தினை மாத்திரமே அடைந்திருந்தது. ஆகவே, செயற்திட்டத்தின் செயற்பாடுகளின் மிகுதி 1 ½ ஆண்டுகள் காலத்தின் போது ஜப்பான் யென் 1,103 மில்லியன் கடனின் மீதி பெறுகைகளை பயன்படுத்துவதற்கு முறையான செயற்பாட்டு திட்டத்தின் ஊடாக உடனடி நடவடிக்கை அமுலாக்கப்பட வேண்டியிருந்தது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீர்த்தேக்கங்கள், நீர் இறைக்கும் இல்லங்கள் பரிமாற்ற மற்றும் விநியோக குழாய்களை வழங்குதல், குழாய்பொருத்துதல் மற்றும் பொருத்துதல் என்பவற்றின் நிர்மாண நடவடிக்கைகள் பின்னர் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கொனிகொடவில் நீரிறைக்கும் இல்லம், மெதவலவில் சேவை நீர்த்தேக்கம் மற்றும் மெதவலவ மற்றும் கொப்பிவத்தவ பகுதியில் குழாய் வழிகளை வழங்குதல் மற்றும் பொருத்துதல் என்பவற்றின் நிர்மாணம் மீளாய்வாண்டின் போது மெதுவான முன்னேற்றத்தை காட்டியிருந்தது.

### 3.3 காணிச் சுவீகரிப்பு

செயற்திட்டமானது ஹரிஸ்பத்துவ பிரதேச செயலக பகுதியில் ஜட்டவவில் நீரிறைக்கும் இல்லத்தை நிர்மாணிப்பதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து 06 காணித்துண்டுகளை சுவீகரித்திருந்ததுடன் 2013 திசெம்பர் மாதத்தில் அவற்றின் மீது ரூபா 6.3 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 607,309 தொகையான தண்டப்பண கட்டணங்கள் செலுத்தாமை காரணமாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு காணியின் உரிமையாண்மை மாற்றப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சர்ச்சைக்குரிய விடயங்கள்

வழமையாக, செயற்திட்ட பதவியணியினரின் வேதனங்களின் கணிப்பீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் செய்யப்படுகின்றதுடன் அதன் நிர்வாக வேலைகளிற்காக செயற்திட்டம் போதிய பதவியணியினரை சேர்த்திருந்த போதிலும் சம்பள செலவினத்தின் 20 சதவீதம் மேந்தலை கட்டணங்களாக செயற்திட்டத்திலிருந்து சாட்டுதல் செய்யப்பட்டிருந்ததன் மீளாய்வாண்டிற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு செயற்திட்டத்தல் செலுத்தப்பட்ட அவ்வறான மேந்தலைக் கட்டணங்கள் ரூபா 6.9 மில்லியனாகும்.